**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUVANNAMALAI.**

**O.S. No. 149 /2021 PW1**

23.04.2025 **வா.சா.1 சந்திரா சத்திய வாக்குமூலத்தின் பேரில் 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை -**

இந்த வழக்கு சொத்து குறித்த விவரங்கள் முழுவதும் எனக்கு தெரியுமா என்று கேட்டால் முழுவதுமாக தெரியும். வழக்கு சொத்துக்களை எனது அப்பா அவரது அப்பா மற்றும் அண்ணன், தம்பிகளிடம் கிரையம் வாங்கினார். எனது அப்பா அவரது அப்பாவிடமும், அண்ணன், தம்பியிடமும் கிரையம் வாங்கிய ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்று கேட்டால் எனது வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். வா.சா.ஆ.1ல் கண்டுள்ள சொத்தை எனது அப்பா அவர் உயிருடன் இருக்கும் போதே விற்று விட்டார் என்றும், அந்த சொத்தை பொறுத்து பாகப்பிரிவினை கோர முடியாது என்றால் சரியல்ல. அவர் வழக்கின் எந்த சொத்தையும் விற்கவில்லை. வா.சா.ஆ.2ல் கண்டுள்ள சொத்தை பொறுத்து நான் எந்த பாகமும் கோர முடியாது என்றால் சரியல்ல. நான் திருமணம் செய்து என் கணவருடன் வாழ்ந்ததாக பொய் சொல்கிறேன் என்றும், நான் என் கணவருடன் வழவேயில்லை என்றால் சரியல்ல. நான் என் கணவர் வீட்டில் வாழ்ந்த போது பிரதிவாதியும், எனது தந்தையும் எனக்கு மகசூல் வருமானத்தை கொடுத்து வந்தார்கள் என தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு ஏற்கனவே பச்சையப்பன் என்பவருடன் திருமணம் ஆனது என்றும், நான் அவருடன் வாழாமல் திரும்பி வந்து விட்டேன் என்றால் சரியல்ல. நான் என் கணவருக்கு எதிராக ஜீவனாம்சம் கோரி வழக்கறிஞர் குமாரசாமி என்பவர் மூலம் சட்ட அறிவிப்பு கொடுத்தேன் என்றால் சரியல்ல. எனது கணவர் ஏ.எம். சுப்பிமணியன் என்ற வழக்கறிஞர் மூலம் பதில் அறிவிப்பு கொடுத்தார் என்றால் சரியல்ல. எனக்கும், என் கணவருக்கும் பிரச்சனை இருந்ததால் என் தந்தை எனக்கு ஒரு சொத்தை ஒதுக்கி கொடுத்தார் என்றால் சரியல்ல. கருமாரப்பட்டி கிராமத்தில் உள்ள 1 1/2 ஏக்கர் சொத்தை விற்று எனது அப்பா எனக்கு பணமாக கொடுத்தார் என்றால் சரியல்ல. நான் எனக்குரிய பாகத்தை எனது அப்பாவிடம் மொத்தமாக வாங்கிக் கொண்டு சென்னையில் சென்று செட்டிலாகிவிட்டேன் என்றால் சரியல்ல. நான் சென்னை சென்ற போது எனது கணவர் பச்சையப்பனை விட்டு விட்டு ராஜேந்திரன் என்ற நபருடன் குடும்பம் நடத்தினேன் என்றால் சரியல்ல. தற்போது ராஜேந்திரன் எனக்கு கணவராக இருக்கிறார் என்றால் சரிதான். வயதான காலத்தில் என்னை பராமரித்து வருகிறார். எனது தந்தை இறந்த பிறகு நான் ராஜேந்திரன் உடன் சேர்ந்து வாழ ஆரம்பித்தேன் என்றால் சரியல்ல. என்னுடைய

ஒன்று விட்ட சகோதரர் கோவிந்தசாமி என்பவர் எனது தவறாக உறவை கண்டித்தார் என்றும், அதனால் அடிதடி நடந்தது என்றால் சரியல்ல. கோவிந்தசாமிக்கும், சங்கருக்கும் சொத்து சம்மந்தமாக சண்டை நடந்தது என்றும், சங்கருக்கு கோவிந்தசாமியை கொலை செய்தமைக்காக அவருக்கு தண்டனை வழங்கப்பட்டது. கோவிந்தசாமியை ராஜேந்திரன் கொலை செய்தார் என்றால் சரியல்ல. மேற்படி கொலை வழக்கில் ராஜேந்திரன், சங்கர் ஆகிய இருவருக்குமே தண்டனை கொடுத்து விட்டார்கள். அந்த வழக்கில் ராஜேந்திரன் தான் உண்மை குற்றவாளி என்றும், சங்கரை வெறுமனே வழக்கில் சேர்த்து விட்டார்கள் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் எனது ஆதரவாக ஆஜராக வேலூர் வழக்கறிஞர் துரைசாமியை நியமித்துள்ளேன் என்றால் சரிதான். சங்கர் அவரது கொலை வழக்கை நடத்தியதற்காக பீஸ் கொடுக்க முடியாமல் அவரது சொத்தை அவரது வக்கீலுக்கு எழுதிக் கொடுத்து விட்டார் என்றால் சரிதான். மேற்படி சங்கர் அவரது வக்கீலுக்கு எழுதிக் கொடத்த சொத்தை இந்த வழக்கில் வழக்கு சொத்தாக காட்டியுள்ளேன். அந்த சொத்தை மீட்பதற்கு நான் முயற்சி செய்தேனா என்றால் செய்தேன். ஆனால் என்னால் மீட்க முடியவில்லை. வக்கீலுக்கு விற்ற சொத்தை சங்கர் தான் கட்டிட கான்டிராக்ட் வேலை செய்து சம்பாதித்து மீட்டார் என்றால் சரியல்ல. நான் மேற்படி சொத்தை மீட்டு இருக்கும் பட்சத்தில் சொத்தை எனது பெயரில் பதிவு செய்திருப்பேன் என்றால் சரியல்ல. 21.12.1994ல் துரிஞ்சாபுரம் கூட்ரோடில் உள்ள கூட்டுறவு வங்கியில் சர்வே எண் 1/2பி வழக்கு சொத்தை நான் அடமானம் வைத்தேன் என்றால் நான் வைக்கவில்லை. நான் தான் அடமானம் வைத்து அந்த தொகையில் வழக்கு செலவை செய்தேன் என்றால் சரியல்ல. அதே சமயத்தில் எனது குடும்ப செலவிற்காகவும் அந்த பணத்தை பயன்படுத்தினேன் என்றால் சரியல்ல. அடமானப் பணத்தை நான் வாங்கவில்லை ஆனால் நான் தான் பைசல் செய்தேன். பைசல் செய்ததற்கான ரசீது என்னிடம் இல்லை. சங்கர் 1/2 பில் அவருக்கு உண்டான பாகத்தை தான் கிரையம் கொடுத்தார் என்றும், அவர் அவ்வாறு கிரையம் கொடுத்தது தவறு இல்லை என்றால் சரியல்ல. எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட நிருபண வாக்குமூலத்தில் கண்டுள்ள விவரங்களை நான் தான் எனது வழக்கறிஞரிடம் கூறினேன். நிருபண வாக்குமூலத்தில் 4ம் பக்கம், 12ம் வரியில் நான் 27.04.2001 தேதியிட்ட ஆவணத்தில் சாட்சி கையொப்பம் போட்டதை ஒப்புக் கொண்டுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் 1ம் பிரதிவாதி தவறான வகையில் என்னிடம் சாட்சி கையொப்பம் பெற்று விட்டார் என குறிப்பிட்டுள்ளேன். அன்றைய தேதியில் நான் ஆவணத்தில் சாட்சி கையொப்பம் போட்டு விட்டு தற்போது வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி 13ம் பிரதிவாதிக்கு செய்த கிரையம் என்னை ஏமாற்றும் நோக்கில் செய்யப்பட்டதாக நான் தவறாக சொல்கிறேன்

என்றும், அது உண்மையான கிரையம் என்றால் சரியல்ல. மேற்படி கிரையம் நடந்த 2007ம் வருடத்தின் போதே எனக்குண்டான பாகத்தை நான் பெற்றுக் கொண்டேன் என்றும், தற்போது நான் வழக்கிற்காக அந்த கிரையம் தவறு என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல. 11.02.2010ல் 2.09 ஏக்கரில் 25 செண்ட் நிலம் 3, 4 பிரதிவாதிகளுக்கு எழுதிக் கொடுத்த கிரையம் உண்மையான கிரையம் என்றால் சரியல்ல. **(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)**

/உண்மை நகல்/

ஒப்பம்/- திரு. ப. மதுசூதனன்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருவண்ணாமலை.